Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 142

திங்கட்கிழமை 17 ஏப்ரல் 2023

சித்திரை 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

நெடுந்தீவுக் கடற்பரப்பில்

## இந்தியப் படகிலிருந்து 62 கிலோ கஞ்சா மீட்பு

3பேர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், ஏப். 17
நெடுந்தீவுக்கு மேற்கே இலங்கைக் கடற்பரப்பில் 62 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாவுடன் பயணித்த இந்தியக் கப்பலை »15

## தினமும் மூன்று லீற்றர் தண்ணீரை அருந்துங்கள்

யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 17
வெப்பமான காலநிலை நிலவுவதால் நோயாளிகள் உட்பட அனைவரும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை காணப்படுகிறது. சூரியன் எமது பிரதேசத்தில் »15

## பெண் சிப்பாய் டெங்கால் சாவு!

யாழ்ப்பாணம், ஏப். 17
டெங்கு காய்ச்சல் காரணமாக குருநகர் இராணுவ முகாமில் பணிபுரிந்த பெண் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கொழும்பைச்சேர்ந்த எம்.கே.செவ்வந்தி (வயது - 23) என்பவரே உயிரிழந்தவராவார். »15

பொலிஸாரின் நடவடிக்கையால் சீற்றம்:

# 'அம்மனுக்கு விசாரணை புத்தருக்கு ஆராதனையா?'

சமூகவலைத்தளங்களில் இளையோர் கொந்தளிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 17**
**தீவகத்துக்கான நுழைவாயிலாக விளங்கும் பண்ணைசுற்றுவட்டத்துக்கு அண்மையில் வைக்கப்பட்ட நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றுவதற்குப் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக எடுத்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. பொலிஸாரின் செயற்பாட்டை பக்கச்சார்பானது என்று கடுமையாகச்சாடி இளையோர் பலரும் சமூகவலைத்தளங்களில் கருத்துப்பதிவிட்டுள்ளனர்.** »15

## வயலுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு!



வவுனியா, ஏப். 17
வவுனியா - புளியங்குளம், புதூர் பகுதியில் வயல் காவலுக்குச் சென்ற இளைஞன் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரி »15

## வவுனியாவில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஏப். 17
வவுனியா, நையினாமடுவில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மனைவி காயமடைந்துள்ளார். »15




## நாகபூஷணி அம்மன் சிலை: இன்று முக்கியமான கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 17
நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு யாழ்ப்பாணப் பொலிஸாரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் ஆராயும் முக்கியமான கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. »15

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 17
பாடசாலைகள் வழமைபோன்று இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.
இன்று திங்கட்கிழமை பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறொரு திகதியில் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென வதந்தி பரவியிருந்த »15

மட்டக்களப்பு நோக்கிய

## அன்னை பூபதியின் ஊர்திப்பவனி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 17
மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராகச் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த அன்னை பூபதித் தாயின் 35 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னையின் தியாகங்களை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் »15

## வேலணையில் கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்., ஏப். 17
வேலணை 6 ஆம் வட்டாரத்தில் கிணற்றுக்குள் வீழ்ந்த குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று இடம் »15



13ஐ நிறைவேற்றுமாறு;

## இந்தியா நிபந்தனை இலங்கை ஏற்காது

சொல்லுகிறது மொட்டுக் கட்சி

கொழும்பு, ஏப். 17
இந்தியா, இலங்கைக்கு நிபந்தனைகளை விதிக்கின்றது. நாட்டுக்கு ஒவ்வாத 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தச்சொல்கின்றது. இலங்கையில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் வாழ்கின்றனர் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும் - இவ்வாறு »15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உரிமைகளை வலியுறுத்திப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 17

**‘தமிழர்களின் மரபுரிமைகளைப் பாதுகாப்போம்’ எனும் தொனிப்பொருளில் அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டமும், தமிழர் தாயகம் தழுவிய கையெழுத்துப் போராட்டமும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.**



ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் அழைப்பு விடுக்கப்பட்ட குறித்த போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றிலில் இடம்பெற்றது. தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வ அமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

போராட்டத்தின் பிரதான கோரிக்கைகளாக:-

1. அழிக்கப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்படவேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும்.

2. குருந்தூர்மலை, கன்னியாய் வெந்நீரூற்று ஆதிசிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படவேண்டும்.

3. இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

4. மட்டு. மயிலத்தனை மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் வாழ்வுரிமை உறுதிப்படுத்தவேண்டும்.

5. போருக்குப் பிந்திய இன, மதப் பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. (ம-20)

## உரிமை கோராவிடின் சிலை அகற்றப்படும்!

### பொலிஸார் அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப். 17


யாழ்ப்பாணம் - பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நாகபூஷணி அம்மனின் திருவுருவச் சிலையை அமைத்தவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகி உரிமை கோராவிட்டால், அந்தச் சிலை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்தலொன்றைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

நீதிமன்றின் கட்டளை என யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் ஒப்பமிடப்பட்ட அறிவித்தல் உருவச்சிலைக்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வழக்கு இலக்கம் குறிப்பிட்டு பொலிஸாரின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் பரிசோதகரினால் யாழ்.பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் ஊர்காவற்றுறை வீதியில் எந்தவித அனுமதியுமின்றி சட்டத்துக்குப் புறம்பாக இனந்தெரியாத நபர்கள் மூலம் அம்மன் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக எதிர்காலத்தில் போக்குவரத்துக்கு இடையூறு மற்றும் இன, மத, சமூக முரண்பாடுகளுக்கு விளைவுகள் ஏற்படும் நிலை உருவாகி சமாதான சீர்குலைவு ஏற்பட வாய்ப்புள்ளதென அறிக்கைசெய்து அந்தச் சிலையை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்திச் சபையின் அதிகாரிக்குக் கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சிலையை உரிய அனுமதிபெற்று அமைத்திருப்பின், அந்த அனுமதியுடன் அல்லது உருவாக்கிய நபர்கள் யாரேனும் இருந்தால் அல்லது இந்தச் சிலையை உரிமை கோரும் யாராவது இருந்தால் எதிர்வரும் 18ஆம் திகதி (நாளை) முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு சமூகமளித்து உரிமை கோருமாறும் மன்று கட்டளையிடுவதுடன் இதன் உரிமை கோருவதற்குத் தவறும் பட்சத்தில் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் இந்தச் சிலை அகற்றப்படும் என இத்தால் அறியத்தருகின்றேன் - என்றுள்ளது. (ம)



## சர்வதேசக் கடற்பரப்பில் போதைப்பொருள் பெருமளவு மீட்பு

இலங்கைக்குத் தெற்கே, சர்வதேசக் கடற்பரப்பில் பெருமளவு போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படை, பொலிஸ் மற்றும் புலனாய்வு அமைப்புகளின் கூட்டு நடவடிக்கையின்போதே மேற்படி போதைப்பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. (ம)

## வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி பெண்களிடம் நகை கொள்ளை!

### ஒருவர் நிறைமாதக் கர்ப்பிணி

வவுனியா, பம்பைமடு பகுதியில் வீதியில் சென்ற தாய் மற்றும் மகள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் அணிந்திருந்த நகைகள் மற்றும் பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் வசிக்கும் தாயும், எட்டு மாதக் கர்ப்பிணியான அவரது மகளும் புத்தாண்டு தினத்தன்று மோட்டார்சைக்கிளில் வவுனியா நகரில் இருந்து பூவரசன்குளம் நோக்கிப் பயணித்துள்ளனர்.

இரவு 8.30 மணியளவில் பம்பைமடுப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது பம்பைமடு இராணுவ முகாமுக்கும், வவுனியா பல்கலைக் கழகத்துக்கும் இடைப்பட்ட பற்றைக் காட்டுக்குள் இருந்து முகத்தை மூடிக் கட்டியவாறு வந்த மூவர் இரண்டு பெண்கள் மீதும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன், சுமார் ஆறரைப் பவுண் நகைகள், ஒன்றரை இலட்சம் ரூபா பணம் மற்றும் அலைபேசிகள் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ் மோப்ப நாய்கள் சகிதம் தேடுதல்களும் தீவிர விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன - என்றனர். (ம-110)

## சைவர்களை அடக்காதீர்; மரபுகளைச் சிதைக்காதீர்

### மறவன்புலவு சச்சிதானந்தம் வலியுறுத்து

யாழ்ப்பாணம் - பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள, நாகபூஷணி அம்மன் திருவுருவச்சிலையை அகற்றுவதற்கு பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள மறவன்புலவு சச்சிதானந்தம், அரச நிலங்களிலும், தமிழர் தாயகத்திலும் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள இதர வழிபாட்டுத் தலங்களை அகற்றுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் - பண்ணையில் அமைந்த அருள்மிகு நாகபூஷணித் திருவுருவம் வரலாற்றுச் சிறப்புடையது. மகாவம்சம் கூறும் மகோதரனும் குலோதரனும் அவன் முன்னோரும் வழிபட்டது.

அத்திருவுருவத்தை முதலில் அழித்தவர் போர்த்துக்கேயக் கத்தோலிக்கர்.

ஒல்லாந்தர் காலத்திலும் அருள்மிகு நாகபூஷணித் திருவுருவத்தை மீளமைக்கவில்லை. ஆங்கிலேயர் காலத்தில் பண்ணையில் அருள்மிகு நாகபூஷணித் திருவுருவத்தை மீளமைத்தனர். பண்ணைப் பாலம் கட்டு முன்பு படகில் மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு செல்வோர் பண்ணைக் கடலைக் கடந்தனர். அருள்மிகு நாகபூஷணி திருவுருவத்தை வணங்கியே படகுகளில் ஏறினர். அங்கிருந்து படகுகளில் வந்து கரையிறங்கி யாழ்ப்பாணம் செல்வோரும் வணங்கி வழிபட்டு மாநகர் சென்றனர்.300 சைவக் குடும்பங்கள், வழிபாட்டிடம் அருள்மிகு பிள்ளையார் கோயில். அந்த வளாகத்துள் அரச அமைச்சர் ஆதரவுடன் மதவெறியர் புத்த பன்சாலையும் கட்டினர். புத்த சமயத்தவர் ஒருவரும் வாழாத கொக்கிளாயில் நிகழ்ந்த இந்த அத்துமீறலை, அடாவடித்தனத்தை அட்டூழியத்தை அகற்ற முதுகெலும்பில்லாத அரச எந்திரம், நாகர்களான சைவர்களின் பல்லாயிரமாண்டுப் பண்ணைப் பாரம்பரியத் திருவுருவத்தை அகற்ற நீதிமன்றத்தை நாடுவராம். சிலாவத்துறையில் புதுக்குடியிருப்பில் அரச நிலம். அங்கே மதவெறியரின் வேளாங்கன்னிக் கத்தோலிக்கத் தேவாலயம். பிரதேசச் செயலகத்தின் நிலம். அகற்றினார்களா அரசினர்? சைவர்கள் வாழாவிருப்பர் எனக் கனவு காண்கின்றனர். அற வழியை வாழ்வாகக் கொண்ட, அறவாழி அந்தணர்களைச் சீண்டுகின்றனர். நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டாளருக்கே அரசால் காணிகள் வழங்கப்படுகிறது

## ஆளுநர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப். 17**

**இலங்கை அரசாங்கத்தால் ஏனைய நாடுகளுக்கு காணிகள் வழங்கப்படுவதில்லை. மாறாக சரியான முதலீட்டாளர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தான் காணிகள் வழங்கப்படுகின்றன என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஆளுநரிடம், 'இலங்கை அரசாங்கம் வடமாகாணத்தில் சுமார் 700 ஏக்கர் காணிகளை சீன அரசாங்கத்துக்கு வழங்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளாரே?' என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். இதற்குப் பதில் வழங்குகையிலேயே 'இலங்கை அரசாங்கத்தால் ஏனைய நாடுகளுக்குக் காணிகள் வழங்கப்படுவதில்லை. மாறாக சரியான முதலீட்டாளர்களை இனங்கண்டு அவர்களுக்குத்தான் காணிகள் வழங்கப்படுகின்றன' என்று ஆளுநர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறீதரனின் கருத்தை நான் அறியாத நிலையில் அவருடைய கருத்துத் தொடர்பில் பதில்கூறமுடியாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கான தேவைப்பாடுகளை உணர்ந்து அதற்கேற்ப செயற்பட்டு வருகின்றது. எனவே, முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் அழைப்புவிடுத்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பல முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் நிலையில் அவர்களின் சரியான திட்டங்களுக்கு அரசாங்கம் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கிறது. வடக்கில் முதலீடு செய்வதற்காக தற்போதைய சூழ்நிலையில் யாரும் விண்ணப்பித்துள்ளார்களா? என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது. அவ்வாறு விண்ணப்பித்திருந்தால் அவர்களுக்குத் தேவையான காணிகளை இனங்கண்டு கொடுப்பதற்கு மாவட்டச் செயலகம் மற்றும் மாகாண காணித் திணைக்களம் என்பன அதற்கான பணிகளை முன்னெடுக்கும் - என்றார். (ம)

### போர்க்காலத்தின் பின்னரும்

# இரணைமடுக்குளப் பகுதியில் ஆக்கிரமிப்புத் தொடர்கின்றது

## சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஏப். 17

கிளிநொச்சி - இரணைமடுக்குளத்தின் தெற்குப் பகுதியில் போருக்குப் பின்னரான 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நில ஆக்கிரமிப்புகள் நடைபெற்று வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி அலுவலகமான அறிவகத்தில் மாவட்டத்தின் கட்சி அமைப்பாளர்கள், வேட்பாளர்கள், பிரதிநிதிகள், பொதுமக்களுடனான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றுள்ளது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதிலும் நிலங்களை சுவீகரிப்பதிலுமே இந்த அரசாங்கம் குறியாக இருந்து வருகின்றது. குறிப்பாக பூநகரி பிரதேசத்தில் அட்டைப் பண்ணைகள், இறால் பண்ணை என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் இரணைமடுவின் தெற்குப் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றது. ஏராளமான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த வலிந்து முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

(ம-14,113)

# முற்றவெளி மைதானத்தில் பாரம்பரிய உணவுத்திருவிழா

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் முற்றவெளி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாண பாரம்பரிய உணவுத் திருவிழா நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்திலுள்ள பாரம்பரிய உணவு வகைகளை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவும், உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் இந்த உணவுத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)






ஒவ்வொரு சீசனுக்கு ஒவ்வொரு பிரச்சினை வாறது வழமைதானே. இப்ப டாக்குத்தர் சீசன் போல. அக்குபஞ்சர் முறையில வைத்தியம் செய்யிற ஒருத்தர், தன்ர சிகிச்சைதான் திறமெண்டும், இங்கிலிஷ் மருந்து குடுக்கிற அலோபதி டாக்குத்தர்மாரெல்லாம், காசுக்காக கண்டகண்ட மருந்துகளைக் குடுத்து, கான்சரை வரப்பண்ணுகினம் எண்டும் ஒரு வீடியோ விட, அதுக்கு எதிராக ஒரு குரூப்பும், ஆதரவா இன்னொரு குரூப்பும் பேஸ்புக்கில களமாடத் தொடங்கிட்டினம்.

இதைப்பற்றி இன்னும் கொஞ்சம் விசாரிச்சுப் பார்க்கேக்க சில தகவல்கள் கிடைச்சுது. அந்த அக்குபஞ்சர் டாக்குத்தர், இஞ்ச கொஞ்சக்காலம் சித்த மருத்துவம் படிச்சிட்டு, பிறகு அதை இடையில விட்டிட்டு, இந்தியாவுக்கு போய் அக்குபஞ்சர் படிச்சுட்டுவந்து அந்த முறையில இஞ்ச உள்ள ஆக்களுக்கு சிகிச்சையளிக்கிறாராம். கனபேருக்கு அவர் வருத்தத்தை மாத்தினவர் எண்டும் சொல்லுகினம். ஆனால், பிரச்சினை என்னெண்டால், இலங்கையில உள்ள மருத்துவமுறையளுக்குள்ள இந்த அக்குபஞ்சர் முறையை பதிவு செய்ய ஏலாதெண்டதால, இப்பவரைக்கும் பதிவு செய்யாமலே அவர் வருத்தக்காரருக்கு சிகிச்சை செய்யிறார். ஆனாலும் அவரின்ர வைத்தியம் பிழைச்சதால சிலர் செத்திருக்கினம் எண்டும் முந்தி ஒருகதை வந்தது. ஆனால் வேற எங்கையோ முதல் ட்ரீட்மெண்ட் எடுத்திட்டு, அங்கையெல்லாம் கைவிட்ட பிறகு, வருத்தம் முத்தின நிலையில் வந்தவைக்கு மனிதாபிமான அடிப்படையில சிகிச்சை செய்யேக்கதான் இப்பிடி அசம்பாவிதம் நடந்ததெண்டு அக்குபஞ்சர் டாக்குத்தர் தரப்புச் சொல்லுது.

ஆனாலும் அவர் பதிவு செய்யாமல் கிளினிக் நடத்துறது சட்டரீதியாப் பிழையான விசயம் தான். ஆனால், அப்பிடி அவர் பதிவு செய்யாமல் இருக்கிறதுக்கு காரணம் எங்கட சுகாதாரத்துறைதான். அவை இந்த அக்குபஞ்சர் முறையை என்ன வகையில் இஞ்ச பதிவு செய்யலாம் எண்ட ஒரு வழியை அந்த டாக்குதருக்குச் சொல்லியிருக்கவேணும். அப்பிடி பதிவுசெய்ய ஏலாதளவுக்கு அக்குபஞ்சர் முறை பொருத்தமில்லாததெண்டால் அந்த டாக்குத்தர் கிளினிக் நடத்தாமல் பாத்திருக்க வேணும். இது பதிவும் செய்யாமல், டாக்குத்தரையும் கிளினிக் நடத்த விட்டிட்டு, இப்ப கனவு கண்டவைபோல திடீரெண்டு சுகாதாரத்துறை இது சம்பந்தமா ஒரு கடிதம் அனுப்பியிருக்காம். இனியாவது சனத்தைக் குழப்பாமல், இதுக்கு ஒரு நல்ல முடிவை ரண்டு தரப்பும் எடுக்கப் பாக்கோணும் கண்டியளோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஓரணியில் எதிர்க்கப்படவேண்டும்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு வலியுறுத்து

கிளிநொச்சி, ஏப். 17

**நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு வலியுறுத்தியுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, அரசாங்கம் கொண்டுவரத் தீர்மானித்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் பதிவுசெய்துள்ளனர். அந்தச் சட்டம் ஜனநாயக அம்சங்கள் அற்றது என்று பலரும் ஊடகங்கள் வாயிலாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். விரைவில் இந்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பெரும்பான்மை பெறப்படும் பட்சத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்படும். ஆனால், இதற்கு ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பைப் பதிவுசெய்து சட்டவரைவு நிறைவேறாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஏனெனில் குறித்த சட்டவரைவு பாரதூரமான சரத்துக்களைக் கொண்டிருக்கின்றது. அதன் ஊடாக அரச பயங்கரவாதம் தலை தூக்குவதற்கான சூழல்கள் இருக்கின்றது. ஜனநாயகம், மனிதஉரிமைகள், ஊடக சுதந்திரம் மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன - என்றார். (ம-113)



தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் புத்தாண்டு தினத்தன்று மாலை 6.30 மணியளவில், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.உமாகரன் தலைமையில் விசேட பூசை வழிபாடுகளும் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (ம-66)



## புத்தாண்டு நிகழ்வுகள் முல்லையில் கோலாகலம்

முல்லைத்தீவு, ஏப். 17
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சித்திரைப்புத்தாண்டு கலை, கலாசார நிகழ்வுகள் முல்லைத்தீவு பிரதேசசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.
தமிழர் பாரம்பரிய முறைப்படி விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து கலை, விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன், இந்துமதக் குருக்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14,246)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினரின் அனுசரணையில் குருதிக்கொடை முகாமொன்று, ஏழாலை வடக்கு, கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ம-14,66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 17
குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
அடுத்த மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ம-66)



## வீரகத்தி விநாயகருக்கு இசைப்பேழை வெளியீடு

கொடிகாமம், ஏப். 17
தாயகக் கவிஞர் கு.வீராவின் வரிகளில் உருவான வீரகத்தி விநாயகன் இசைப்பேழை வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, காலை 9 மணிக்கு கோயில் கோபுர வாயிலில் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பரிபாலனசபைத் தலைவர் செ.சதீஸ்குமார் தலைமையில் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ.புஸ்பராசா குருக்கள் முன்னிலையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, சிறப்பு அழைப்பாளர்களாக சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், வடமாகாணசபை பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருவாளர் கு. பாலசண்முகன் மற்றும் கல்வியியலாளர்கள், கவிஞர்கள், பக்த அடியார்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-159)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக முக்கியமான முடிவு எடுக்கவேண்டி ஏற்படும்.

**மிதுனம்:** சிலருக்கு வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். பிற்பகலுக்கு மேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடவுளர்களுக்கும் நிம்மதி இல்லை

மீண்டும் ஒரு சிலையால் சர்ச்சை ஒன்று உருவாகியுள்ளது. சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தில் இனந்தெரியாத சிலரால், நாகபூஷணி அம்மனின் சிலையொன்று வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிலையை அகற்ற அனுமதி கோரிப் பொலிஸார் அவசர அவசரமாக நீதிமன்றத்தை நாடியுள்ளனர். இந்தச் சிலையை ஏன் அகற்றவேண்டும் என்பதற்கு பொலிஸார் முன்வைத்த காரணங்களைப் படிக்கும் எவருக்கும் வயிறு புண்ணாகுமளவுக்கு சிரிப்பு வரும் என்பது மட்டும் உறுதி.

எதிர்காலத்தில் போக்குவரத்துக்கு இடையூறு, மத – இன ரீதியான முரண்பாட்டைத் தோற்றுவித்தல், சமாதான சீர்குலைவு ஏற்படும் என்ற காரணங்களே அம்மன் சிலைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. எப்படியாவது இந்த நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றவேண்டுமென அரசதரப்பு துடிப்பதையே பொலிஸாரின் அவசரமான– அதுவும் நீதிமன்றுகள் இயங்காத வார இறுதி நாளில் கூட – நீதிமன்றத்தை நாடிய செயல் வெளிப்படுத்துகின்றது.

மேலிடத்து உத்தரவு இல்லாமல் பொலிஸார் இப்படிப் பதறியடித்துக் காரியமாற்றமாட்டார்கள். அனுமதி பெறப்படாமல், சிலைகளை வைப்பது தவறுதான். ஆனால், அப்படி வைக்கப்பட்ட ஒரு சிலையை அகற்றவேண்டுமென்பதில் அதீத அக்கறைகாட்டும் அரசாங்கமும், அரச இயந்திரமும் இதே அக்கறையை சட்டவிரோதமான முறையில் வைக்கப்பட்ட புத்தர் சிலைகளிலும், விகாரைகளிலும் ஏன் காட்டுவதில்லை? அதுவும் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள இடத்தில் இந்துக்கள் அதிகமாக வாழும் பகுதியில் – யாழ்.பண்ணைச் சுற்றுவட்டப்பகுதியில் நாகபூஷணி அம்மனின் சிலை வைக்கப்பட்டமைக்கே இந்தத் துள்ளல் என்றால், சிங்களவர்களோ, பௌத்தர்களோ இல்லாத குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் கட்டிய விகாரை மீது ஏன் அரச இயந்திரம் கைவைக்கவில்லை. நேற்றுமுன்தினம்கூட, குறிகாட்டுவானில் புத்தர் சிலையொன்றை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படத் தொடங்கியுள்ளன. அதுபற்றி ஏன் பொலிஸார் கண்டும் காணாமல் இருக்கின்றனர்? அம்மன் சிலையால் இன – மத நல்லிணக்கம் பாதிக்கும் என்று சொல்வோர் புத்தரின் பெயரால் விழுங்கப்படும் காணிகளாலும், சட்டவிரோத விகாரைகளின் ஆக்கிரமிப்பாலும் சிதையும் நல்லிணக்கத்தைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? என்றெல்லாம் பல கேள்விகள் எழுந்தாலும், அவற்றுக்கெல்லாம் அரசோ, அரச இயந்திரமோ பதில் தரப்போவதில்லை.


அதிகம் போகத்தேவையில்லை, அண்மையில் இனம் தெரியாதோரால் இடித்து அழிக்கப்பட்ட வெடுக்குநாறிமலை விக்கிரகங்களை மீள அமைப்போம் என்று நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி வழங்கி வாரக்கணக்காகி விட்டது. ஆனால், அங்கு ஒரு சிறு செங்கல் கூட வைக்கப்படவில்லை. 'விக்கிரகங்களை வைத்துவிட்டுத்தான் வீடு திரும்புவோம்' என்று வீராப்புடன் புறப்பட்டுப் போன அமைச்சர்களான டக்ளஸும், ஜீவன் தொண்டமானும் 'வழக்கு இருப்பதால் நாங்கள் ஒன்றுமே செய்யமுடியாது' என்று பம்மிப் பதுங்கி போனவழியே திரும்பிவரத்தான் முடிந்ததே தவிர, ஒரு விக்கிரகத்தைத்தானும் அங்கு பிரதிஷ்டை செய்யமுடியவில்லை. அந்தளவுக்கு இந்துக்கடவுளர்கள் மீதும், வழிபாட்டிடங்கள் மீதும் வக்கிரத்தைக் கக்கும் பேரின அரசாங்கம், புத்தரின் சிலைகள் வைப்பதையும், விகாரைகள் கட்டுவதையும் ஊக்குவிக்கின்றது. எங்காவது ஓரிடத்தில் திடீரென புத்தர் சிலைகள் முளைத்துவிட்டால், அடுத்த நொடியே அந்தச் சிலைக்கு படைத்தரப்பின் பாதுகாப்பு வழங்கப்பட்டுவிடும். அவ்வாறான 'திடீர்' புத்தர் சிலைகள் நல்லிணக்கத்துக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு என்று கூறி, ஒருபோதும் பொலிஸார் நீதிமன்றப் படியேறியது கிடையாது. ஆனால், இந்துக்கடவுளர்களின் சிலைகள் வைக்கப்பட்டால் மட்டும் அரச இயந்திரத்தின் மூக்கில் உடனே வியர்த்து, கடமையுணர்ச்சி அதிகரித்து களத்தில் இறங்குவது தான் இலங்கையின் நீண்டகால வழக்கமாக இருக்கின்றது.

தமிழர்களுக்குத்தான் இலங்கையில் நிம்மதி இல்லையென்றால் தமிழர்களின் கடவுளர்களுக்குமா..?

நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கை என்பது உங்களைக் கண்டறிவதல்ல, உங்களை உருவாக்கிக் கொள்வது"

– ஜோர்ஜ் பேர்னாட்ஷா



# ரேடர் தளம் தொடர்பில் இந்தியா கழுகுப்பார்வை

**கொழும்பு, ஏப். 17**

**சீனாவின் உதவியுடன் இலங்கையில் ரேடர் தளத்தை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படும் நிலையில், இது தொடர்பில் இந்தியா தனது உச்சக்கட்டக் கண்காணிப்பைச் செலுத்தியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

மியான்மரின் கொக்கோ தீவுகளில் இராணுவத் தளமொன்று உருவாக்கப்படுவதும், இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள தொலைதூர செயற்கைக்கோள் தரவுகளை பெறும் நிலையமும் பிராந்தியத்தில் சீனாவின் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்த கரிசனையை இந்தியாவுக்கு ஏற்படுத்தியுள்ளன என 'இந்து நாளிதழ்' தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகிலுள்ள கொக்கோ தீவுகளில் இராணுவத் தளமொன்று உருவாக்கப்படுவதை சமீபத்தைய செய்மதிப் படங்கள் காண்பித்துள்ளன எனத் தெரிவித்துள்ள இந்து நாளிதழ், இலங்கையில் தொலைதூர செயற்கைக் கோள் தரவுகளைப் பெறும் நிலையமொன்றை உருவாக்கும் யோசனையை முன்வைத்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனா இந்த ரேடர் தளத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட வளங்களை வேவு பார்க்கலாம். பிராந்தியத்தில் தகவல்களை இடைமறித்துக் கேட்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளது.

(ம-இ)

# தேசிய இணக்கப்பாட்டு அரசு ரணிலின் கோரிக்கை நிராகரிப்பு

## டலஸ் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 17

தேசிய இணக்கப்பாட்டு அரசொன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை ஏற்காதிருக்க டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள்சபை தீர்மானித்துள்ளது.

டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட மொட்டுக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்தே சுதந்திர மக்கள்சபையை நிறுவியுள்ளனர். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம், மத்திய வங்கிச் சட்டம் போன்ற விடயங்களில் கொள்கையளவில் உடன்பட முடியாது என்பதாலேயே, தேசிய அரசு யோசனையை நிராகரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பரந்துபட்ட எதிரணிக் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு இந்த அணி போராடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-44)

நாளை

18.04.2023
செவ்வாய்க்கிழமை
சித்திரை 05

சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுங்கோல் அரசுக்கெதிராக அனைவரும் திரளவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு



**கொழும்பு, ஏப்.17**
**மக்களின் ஜனநாயக உரிமைகள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. அரசின் இந்தக் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் போராட இன, மத, சாதி பேதமின்றி சிவில் அமைப்புக்களும், பிரஜைகளும் ஒன்றாக அணிதிரளவேண்டும் - இவ்வாறு அறைகூவல் விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மக்களுக்குப் பயந்த, மக்கள் அபிப்பிராயத்தை ஊசலாட்டும் திறமையற்ற தற்போதைய அரசு 24 மணிநேரமும் 365 நாள்களுமாகத் தேர்தலை நடத்தவிடாமல் தடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசு தேர்தலை எதிர்கொள்ளும் அச்சத்தால் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வழங்காமல் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அழுத்தங்களைப் பிரயோகித்தும் தேர்தலைச் சீர்குலைக்க முயற்சிக்கின்றது.
பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டம் போன்ற சட்டங்களின் ஊடாக மக்களின் எழுச்சியைக் கட்டுப் படுத்தி மக்களை அடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் கீழ் ஊடகங்களை அடக்கி, மக்கள் தங்கள் உரிமைகளுக்காக முன்நிற்கும் போது அவர்களைப் பயங்கரவாதிகள் என்று அழைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைக்கூட மீறும் வகையில் அரசு செயற்படுகின்றது - என்றார். (எ-22)

## விரிவுரையாளர்கள் மீண்டும் பணிக்கு!

கொழும்பு, ஏப்.17
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று முதல் கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்கவுள்ளனர்.
அரசாங்கத்தின் வரிக் கொள்கை உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அதனால் பல நாள்களாக பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பத் தீர்மானித்துள்ளனர்.
அதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குத் திருப்திகரமான முடிவு எட்டப்படும்வரை உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் ஈடுபடுவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கமுடியாது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது. அதனால், உயர்தர விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் சுமார் 2 மாதங்களாகத் தாமதமாகியுள்ளன.
பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கைகள் மிக விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத சந்தர்ப்பத்தில், பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப் படுவர் என அந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 17
குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மேற்படி ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.சின்னராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-66)

## மின்னல் தாக்கியதில் சிறுவன் உயிரிழப்பு!



கொழும்பு, ஏப்.17
ருவன்வெல்ல பகுதியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதில் 12 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேலும் இரு சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
ருவன்வெல்ல - மாப்பிட்டிகம பிரதேசத்தில் களனி ஆற்றில் குளித்துவிட்டு வீட்டுக்கு நடந்து சென்ற குழுவினர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.
மின்னல் தாக்கி உயிரிழந்த சிறுவன் ருவன்வெல்ல, கோனகல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், காயமடைந்தவர்கள் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## காப்புறுதி நிறுவன முகாமையாளரின் கார் கடலுக்குள் பாய்ந்தது

யாழ்ப்பாணம், ஏப். 17
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல காப்புறுதி நிறுவனத்தின் முகாமையாளர் செலுத்திய கார் வேகக் கட்டுப்பாட்டில் இழந்து கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.




ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர்-பொன்னாலை பாலத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றது.
விபத்துக்குள்ளான காரை கனரக வாகனத்தின் உதவியுடன் கடலுக்குள் இருந்து பொலிஸார் மீட்டனர். காப்புறுதி நிறுவன முகாமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-23)

## இளைஞர்கள், யுவதிகளுக்கு இலவசமாக 70,000 ஆடுகள்!

கொழும்பு, ஏப்.17
இந்த வருடத்தில் ஆடுகளை வளர்க்க விரும்பும் இளைஞர், யுவதிகளுக்கு 70 ஆயிரம் ஆடுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கும் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு அந்த ஆடுகள் வழங்கப்படவுள்ளன.
தேவையான தொழில்நுட்பம் மற்றும் உயர்தரமான ஆடுகளை வழங்குவதற்கும், தனியார் துறையின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சு செயற்பட்டு வருகின்றது என்று விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதற்கமைய ஜமுனாபாரி, கொட்டுகச்சி, போயர் மற்றும் சணல் போன்ற உயர்தரமான ஆடுகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## நாட்டை மீட்கக்கூடிய ஆளுமை ரணிலிடம் மட்டுமே உள்ளதாம்!

### ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, ஏப்.17
அனைத்துத் தரப்புக்களையும் இணைத்துக்கொண்டு நாட்டை மீட்கக்கூடிய ஆளுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளது. அவரை இந்த நாடு உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன எம்.பி. தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
தன்னை எதிர்ப்பவர்களையும் அரவணைத்துக் கொண்டு அரசியல் செய்யக்கூடிய அனுபவமிக்க சிறந்த தலைவரே ரணில் விக்கிரமசிங்க. இந்த பண்பு அனுபவம் எல்லோரிடமும் இருக்காது. எதிராளிகளைக்கூட அரவணைக்கும் பக்குவம் அவருக்கு உள்ளது. இந்த நாட்டைமீட்பதற்குஅனைத்து அமைப்புகளும் (கட்சிகள்) ஒன்றிணைய வேண்டியது மிகவும் அவசியம். அதை ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே செய்யமுடியும் - என்றார். (எ-44)

## அரசாங்கத்துக்கு ஆதரவா? சிக்கலுக்குள் சேனாரத்ன!

கொழும்பு, ஏப்.17
தற்போதைய அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் ஆதரவளிப்பதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில், உடனடியாக அறிக்கை வெளியிடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவிடம் ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.
ராஜித சேனாரத்ன அரசாங்கத்துடன் இணையவுள்ளார் என்று ஊடகங்களில் வெளியான அனைத்துச் செய்திகளையும் ராஜித சேனாரத்ன நிராகரித்துள்ளார்.
எனினும், சுகாதார அமைச்சர் பதவியை வழங்கினால், அதனை ஏற்கத்தயார் என அண்மையில் சேனாரத்ன தெரிவித்ததாகக் கூறப்படும் அறிக்கை தொடர்பில் ஆராய ஐக்கிய மக்கள் சக்தி குழுவொன்றை நியமித்துள்ளது என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் பைடன் போட்டி



வொஷிங்டன், ஏப். 17

**அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பைடன் போட்டியிடவுள்ளார்.**

2024ஆம் ஆண்டு பிற்பகுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பான பரப்புரைகள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ட்ரம்ப் போட்டியிடவுள்ளமை ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக யார் போட்டியிடுவார் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. பைடன், ஹிலாரி கிளிங்டன், கமலா ஹரிஸ் மூவரில் ஒருவருக்கே வாய்ப்புக்கள் அதிகம் என்று கருதப்பட்ட நிலையில், ஜனநாயகக் கட்சியின் பொதுவேட்பாளராகப் போட்டியிடப்போவதை பைடன் வெளிப்படையாக அறிவித்துள்ளார். மூன்று நாள்கள் பயணமாக பைடன் அயர்லாந்துக்குச் சென்றுள்ளார். இந்தப் பயணத்துக்கு முன்பாகவே அதிபர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அறிவிப்பை அவர் விடுத்தார். தேர்தல் பரப்புரைகள் தொடர்பில் விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் பைடன் மேலும் தெரிவித்தார். (ம)



## விண்வெளித் தக்காளி வருகின்றது பூமிக்கு!

வொஷிங்டன், ஏப். 17

விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளி, பிரத்தியேக விண்கலம் மூலம் பூமிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாஸா தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் விண்வெளியில் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தும் நோக்கில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. பிற கிரகங்களில் மனிதர்கள் வாழும் சாத்தியக்கூறுகள் தொடங்கி அந்த கோள்களில் நீர் உள்ளதா என்பது வரையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்களைக் குடியேற்றும் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு நிலவில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரியைக் கொண்டு செடியை வளர்த்து அசத்தி இருந்தனர் விஞ்ஞானிகள். நாஸா மற்றும் புளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாகவே விண்வெளியில் தக்காளி செய்கை செய்யப்பட்டுள்ளது. அது பிரத்தியேக விண்கலம் மூலமாக பூமிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (ம)

## நிக்கோபாரில் நிலநடுக்கம்!

அந்தமான் - நிகோபார் தீவுகளில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.9 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

எனினும் தெய்வாதீனமாக பெரும் சேதங்களோ அல்லது உயிரிழப்புக்களோ ஏற்படவில்லை - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## சூடானில் பல பகுதிகள் போராளிகள் வசமாகின!

### இராணுவ ஆட்சிக்கு எதிராக திடீர் எழுச்சி

கார்த்தும், ஏப். 17

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் வெடித்துள்ள நிலையில், அந்த நாட்டின் தலைநகர் கார்த்தூமின் பல பகுதிகள் போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

சூடான் நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு இராணுவ ஆட்சிக்கு எதிராக போராளிகள் போரிட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே, சூடான் நாட்டின் கார்த்தூம் விமான நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக போராளிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, அங்கு கடும் துப்பாக்கிச்சண்டை நேற்று இடம்பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)



## வடகொரியா ஏவுகணைச் சோதனை: தீபகற்பத்தில் மீண்டும் பதற்றநிலை!

பியாங்யாங், ஏப். 17

கொரியத் தீபகற்பத்தில் அண்மையில், தென்கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து போர்ப்பயிற்சியை நடத்திய நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது.

வடகொரியா அண்மைக்காலமாகவே தீபகற்பத்தில் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது. இதனால், வடகொரியாவால் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்துள்ள தென்கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் இணைந்து தீபகற்பத்தில் 'அறிவிக்கப்படாத' இராணுவக் கூட்டணியையும் போர்ப்பயிற்சிகளையும் அண்மையில் முன்னெடுத்தது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள வடகொரியா, தென்கொரியா தான் தன்னை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டியதுடன் அதி சக்திவாய்ந்த ஏவுகணைகளையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை நேற்றுமுன்தினம் மீண்டும் சோதித்துள்ளது. (ம)

## ஜப்பான் பிரதமர் கிஷிடாவை இலக்குவைத்துத் தாக்குதல்!



டோக்கியோ, ஏப். 17

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவை இலக்குவைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், அவர் காயங்கள் இல்லாமல் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

பிரதமர் புமியோ வாகயாமா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவரை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்புப் படையினர் பிரதமரைச் சூழ்ந்து அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். அத்துடன் தாக்குதல் நடத்திய நபரை பொலிஸார் மடக்கிப்பிடித்துக் கைது செய்தனர். ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே கடந்த 2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஒரு பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு வரணி மற்றும் கொடிகாமம் ஆகிய சமுர்த்தி வலயங்களில் பயனாளிகளால் உருவாக்கப்பட்ட ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தும் விற்பனைக்கூடங்கள் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-9)




அராலி சிறிமுருகன் முன்பள்ளியின் கலைவிழா கடந்த சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (14)



அராலி சரஸ்வதி முன்பள்ளியின் விளையாட்டு விழா, முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி பொறுப்பாசிரியர் சிவநாயகம் வீரவாகு தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமார் கலந்துகொண்டார். (ஒ-14)


# கண்ணீர் அஞ்சலி



## செல்லத்துரை புஸ்பராசா (கண்ணன்)

அவர்கள் நேற்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் பணிப்பாளரும், பணியாளர்களும்.

(CR 39657) A-1



# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 01 . 1936



மறைவு 14 . 04 . 2023

## சிவபாக்கியம் (சொர்ணம்மா) தியாகராசா

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் (சொர்ணம்மா) தியாகராசா கடந்த (14.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தாவடியை பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், தியாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தணிகாசலம், வேலையா, முத்துக்கிளி, கமலா ஆகியோரின் சகோதரியும், மாணிக்கராசா, சாரதா, ஜெகதா, வனிதா, ஆனந்தராசா, காலஞ்சென்ற மன்மதராசா, மதிமுகராசா, அனுசுயா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாத்திமா, சிறிகுமாரன், செல்வநாயகம், வைதேகி, சிவப்பிரியா, கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சொர்ணம்மா, மன்மதன், சிவானி, சிறிகான், மார்வின், வைஷ்ணவி, மதன்ராஜ், நேத்திரா, மைத்திரேயி, அனுராம், கிஷோ, றியா, பானுசன், அனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
021 205 2729, 077 400 4827
மல்லிகா - +41791927745 (WhatsApp)



# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 02 . 1963



மறைவு 16 . 04 . 2023

## விஜயரட்ணம் இராஜேஸ்வரன்

யாழ். வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு பெரிய போரதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. விஜயரட்ணம் இராஜேஸ்வரன் அவர்கள் நேற்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் இராசாத்திஅம்மா தம்பதியரின் மூத்த புத்திரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் காளியம்மா தம்பதியரின் மருமகனும், வேணியின் அன்புக் கணவரும், றஜீவன், றஞ்சித், றதீஸ்க்காந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிதரன், கிருஸ்ணகுமார் (வவி), சுஜாத்தா, சுரேஸ்குமார், யசோதரன், யசோதா ஆகியோரின் சகோதரனும், கவிதா, அசோகன், தமயந்தி, றோசா, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தர்மராஜன் மற்றும் சறோசா தேவி, சாந்தி, தெய்வேந்திரம் (பாபா), ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுரேஸ் - 074 319 6890
யசோதரன் - 076 291 4616
யசோதா - 077 582 7114

தகவல்: குடும்பத்தினர்.

(CS 24501) A-1



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் சின்னத்தம்பி கந்தசாமி
## (தொழிலதிபர்)

(முன்னாள் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க தென்மராட்சி கிளைத் தலைவர், சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் படையாண்டாந் தோட்டம் முருகன் ஆலய நிர்வாக சபையின் பொருளாளர், ஸ்தாபகர் - ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம் , ஸ்ரீ ஐங்கரன் பல்பொருள் வாணிபம், ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம், சிவகாமி நெற்கபே டச்சு வீதி, சாவகச்சேரி)

திதி:- அபரபக்க துவாதசி



மலர்வு 01.11.1943 உதிர்வு 18.03.2023

### எப்பிறப்பிற் காண்போம் இனி?
### ( நேரிசை வெண்பாக்கள்)

மற்றவர் தம்மை மனதாலும் வாட்டாத/
நற்குணம் கொண்டு நடந்தவரே - இற்றரையில்
தப்பேதும் செய்யாத் தயாபரரே உம்மையினி/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

ஐங்கரன் மண்டபம் ஆங்கோர் வெதுப்பகம்/
தங்கும் மகிழ்வோடு தந்தீரே - எங்குமுன்
தப்பிலா நற்குணம் தாரணியில் ஓங்குமே/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

சுவட்டுறவுச் சங்கத்தில் கூடிய காலமாய்/
காட்டிய அக்கறை காசினியில் - வாட்டமின்றி
எப்போதும் வாழ்வை இனிதுயர வைத்ததே/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

கண்ணீர் பெருகிடக் காலமெலாம் நாமழ/
மண்ணினை விட்டு மறைந்தீரோ - விண்ணிலே
எப்போதும் இன்புற் றிருப்பீரே நாமும்மை/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

உற்றவரும் மற்றவரும் ஊராரும் போற்றிட/
இற்றரையில் என்றும் இருந்தவரே - செற்றவரும்
எப்போதும் இன்புற ஏற்றவழி சொன்னவரே/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

கடிந்துமே பேசிடாய் காய்தலும் செய்யாய்/
மிடியே மிகினும் மிரளாய் - துடிப்புடன்
எப்போதும் இப்புவியில் இன்பமாய் வாழ்ந்தீரே/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

நல்லன எல்லாம் நயமாய் உரைத்துமே/
வல்லாராய் மக்கள் வளரவே - துல்லியமாய்
எப்போதும் நல்லுரை ஏற்றமாய் தந்தீரே/
எப்பிறப்பிற் காண்போம் இனி.

"யாழ்முத்து ", "வெண்பா வித்தகர் "
செல்வராஜா சுதாகரன்
( வயலூரான்)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (17.04.2023) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் இந்நிகழ்வில் அனைவரும் கலந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

குறிப்பு :- இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

1ம் மைல் வீதி, மருதடி மேற்கு,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

(CR/39655) AH-1

குடும்பத்தினர்.


## அனைத்து அரச நிறுவனங்களும் 'கோப்' குழுவின் முன்னிலையில்!

அனைத்து அரச நிறுவனங்களையும் 'கோப்' குழு முன்னிலையில் அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்தக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

420 அரச நிறுவனங்களை 'கோப்' குழு முன் அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி, வருடாந்தம் அரச நிறுவனங்களை 'கோப்' குழுவின் முன் அழைக்கவேண்டும் என்கின்றபோதும், அது சரியான முறையில் செயற்படுத்தப்படுவதில்லை.

ஏப்ரல் மாதத்தில் 4 அரச நிறுவனங்கள் 'கோப்' குழு முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன. இதன்படி இம்மாதம் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், காணி சீர்திருத்த ஆணைக்குழு, இலங்கை விமானசேவை மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன 'கோப்' குழுவின் முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கருத்து உரிமையை நசுக்கும்

## சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் கண்டனம்

**கொழும்பு, ஏப்.17**

**இலங்கையின் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக இலங்கையின் நாடாளுமன்றம் முன்வைத்துள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் இலங்கையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையின் மீதான கட்டுப்பாடுகளை மேலும் அதிகரிக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்று சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் கண்டித்துள்ளது.**

இலங்கையைச் சேர்ந்த தனது இணைஅமைப்புக்களுடன் சேர்ந்து உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், முன்மொழியப்பட்ட நகல்வடிவை மீளப்பெறவேண்டும் என்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பத்திரிகை சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் கடுமையாகக் குறைக்கும் விதத்தில் காணப்படுகின்றது. உத்தேச சட்டவரைவை தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், சிவில் சமூகத்தினர், சட்டத்துறையினர், ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்பவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் விமர்சித்துள்ளனர். இலங்கையில் தற்போது காணப்படும் ஸ்திரமின்மைக்கு மத்தியில் இந்த உத்தேச சட்டவரைவு உடன்பட மறுப்பவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் மீது ஒடுக்குமுறையை முன்னெடுப்பதற்குப் பயன்படலாம் என்றும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சட்டவரைவு பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணங்களை சர்வதேச வழிகாட்டுதல்களுக்கு அப்பால் விஸ்தரிக்கின்றது. அரசாங்கத்தால் சட்டவிரோதமானது எனக் கருதப்படும் ஒன்றுகூடலில் பங்கேற்பது போன்றவற்றையும் சட்டவரைவு பயங்கரவாதத்துடன் சேர்க்கின்றது - என்றுள்ளது. (எ-இ)

## சீனாவுக்கு அனுப்புவதற்கு கேகாலைப் பகுதியிலிருந்து குரங்குகளைப் பிடியுங்கள்!

கொழும்பு, ஏப்.17

சீனாவுக்கு அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு இலட்சம் குரங்குகளை தமது பகுதியில் இருந்து பிடிக்க வேண்டும் என்று கேகாலை மாவட்ட விவசாயிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 8 இலட்சம் பேர் வாழும் நிலையில், அங்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குரங்குகள் உள்ளன என்றும், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் ஏராளம் எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீடுகளில் சமைத்த உணவுகளை பாத்திரத்துடன் குரங்குகள் தூக்கிச் செல்லும் நிலை காணப்படுகின்றது என்றும், அங்கு உணவு பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவுக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள குரங்குகளில், பெரும்பாலானவற்றை தமது பகுதிகளில் இருந்து பிடிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரியுள்ளனர். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட சுழிபுரம்மேற்கு கலைமகள் முன்பள்ளியில் கால்கோள் விழாவும் 32 வருட சேவையாற்றிய ஆசிரியருக்கான கௌரவிப்பு நிகழ்வும் சுழிபுரம்மேற்கு கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவர் வ.கோகுலநேசன் தலைமையில் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-125)



யாழ்.ஈவினை மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ய-66)



இருபாலை கற்பக விநாயகர் ஆலய முன்பள்ளியின் கால்கோள் விழாவின்போது 12 மாணவர்கள் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதற்கான நிதியை கனடாவைச் சேர்ந்த மிட் லண்ட் மலிடி மீடியா நிறுவன ஊழியர்களின் பங்களிப்பில் லயன் கலாநிதி நா. தனேந்திரனால் வழங்கப்பட்டது. (ய)





இனுவில் கரங்கள் அமைப்பினால் இனுவிலில் உள்ள ஏ.டி.சி கல்வி நிலையத்துக்கு புதிதாக ஒரு வகுப்பறை ஒன்றை நிர்மாணித்து கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது. (ய-20)

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தரம்1 மாணவர்களைப் பாடசாலைக்குள் இணைத்துக் கொள்ளும் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. (ய-66)





சாவகச்சேரி பாரதிபாலர் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன் கண்காட்சி கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-159)



நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் இல்ல மெய்வன்மை போட்டி அண்மையில் நடைபெற்றது. (ய)



## சாதனையாளர்கள் கௌரவிப்பு

லண்டனிலுள்ள பழைய மாணவர்கள் உசன் பவுண்டேசன் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் மிருசுவில் - உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மேற்குறித்த நிகழ்வில் அழகியல்துறை சார்ந்து அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவர்கள், தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்கள், க.பொ.த.சாதரணதரப் பரீட்சையில் உயர் சித்தி பெற்ற மாணவர்கள் மற்றும் வழிப்படுத்திய ஆசிரியர்கள் ஆகியோர் சான்றிதழ்கள், பணப்பரிசில்கள் மற்றும் பாராட்டுச்சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Institute of Junior

Best Wishes

## Spoken & Written Elocution (எலக்கியூசன்)

**பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற மாணவர்களை பாராட்டுகின்றோம்**

வாழ்த்துக்கள் Best Wishes



P.அபிஷேக் | K.அனாமிகா | P.அஷ்வின் | G.ஹர்ணிகா | G.மிதுகர்ஷன் | J.மஞ்சரி



K.யஸ்வினி | K.யதுஷ்னா | T.நிதிக்ஷன் | K.சன்ஷயா | K.ஷிருஸ்ரிஹறன் | M.நிக்சிகா | J.அஷ்மிகா | N.இலக்கியா



U.லிசாதனா | P.அக்ஷயா | P.வருணிக்கா | R.ஆத்விக் | R.யனுசாதனா | R.கேஷிகன் | R.கேஷிரம்யாழினி | S.அதுர்ஸ்ரிகா



S.ஹர்ஷிகா | S.யிவானு | S.கனிஸ்ரிகா | S.றெனொமிகா | S.ஷஞ்சனா | S.தருஷனன் | S.தேனுஸ்ரீகா | T.இனியா



T.இனோக்ஷ்சன் | T.கௌதமி | T.M.சாகித் | T.நர்ஷிகன் | T.யாழோவியன் | V.பிரனீஷா | V.பிரீத்திகா | V.ரிஷிகா



Y.ஆருத் | D.நற்றாலியா | J.கிரிஷ் | J.லயக்சயா | K.யினோஸ்வியா | K.மோகலஜா | M.நிருஷிக்கா | M.பியோனிக்கா



N.ஹர்ணி | N.இலக்கணா | P.ஆருஷன் | A.அபூர்வன் | R.நயனிக்கா | R.சிந்தூரிக்கா | S.கஷ்வின் | S.விஷாலி



T.ஆகித்யா | T.ஜதுஜன் | V.அகரன் | V.நதுஷன் | V.சர்வின் | V.யஸ்வின் | U. தாருகேஷன்

(CS 24430) A-1

* Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written) 4 வயதிலிருந்து 14 வயதுவரை
* Normal English Classes (ஆங்கில வகுப்புக்கள்)

**30.04.2023 இற்கு முன்அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்**

ஆசிரியர் :- திருமதி பிரகாஷ் சுமிதா
(கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630**

**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம் :- 29.04.2023 சனிக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3.30 மணி
இடம் :- பாடசாலை பொது மண்டபம்

அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். (பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்கள்)

**தகவல் : செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**

(CS/24494)AH-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 21.03.2023 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

### திருமதி இராசபூபதி நாகேந்திரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.04.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரை அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 20.04.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து சுன்னாகம் 141, கே.கே.எஸ் வீதியிலுள்ள திசா ஹொட்டலில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சந்தை வீதி, சுன்னாகம்.** **குடும்பத்தினர்.**

(CS 24498)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 • 09 • 1944



மறைவு 14 • 04 • 2023

### நாகராஜா மகேஸ்வரி

உடுவில் தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட நாகராஜா மகேஸ்வரி அவர்கள் கடந்த (14.04.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் திரு.திருமதி கார்த்திகேசு நாகரத்தினம் தம்பதியரின் அன்பு புதல்வியும், இராசையா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராஜா அவர்களின் அன்பு மனைவியும், மதியழகன், மணிவண்ணன், மணிமாறன், மதிவதனன், மதிறஜனி, மலர்விழி, ஸ்ரீபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார், நவீனச்சந்திரன், லிஸ்ரோ, லொறண்டா, கிருஷ்ணவேணி (கௌரி), சறோஜினி, பிரதீபா, ரூபா ஆகியோரின் அன்பு மாமியாரும், நடராசா அவர்களின் பாசமிகு தங்கையும், வனேசா, மதி, மதிதியூ, மலியா, மலாக்காய், மராயா, ரோஜன், அகழியா, நிகேதன், தினேஸ், சங்கீதா, டேவிகா, டிலானிகா, யஸ்மிதா, வினுஷன், வினுஷியா, சினேகா, அபிஷா, லௌஜன், லோஹித், இஷானா ஆகியோரின் பேர்த்தியும், நாயா அவர்களின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**உடுவில் தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 97 84 934**

(CS 24497)AH-1

## மரண அறிவித்தல்

### பற்றிக் இம்மனுவேல் மேரி பியாற்றிஸ்



சில்லாலை, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பற்றிக் இம்மனுவேல் மேரி பியாற்றிஸ் கடந்த (11.04.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளை - மரியம்மா (செல்லக்கண்டு) தம்பதிகளின் மகளும், மனுவேற்பிள்ளை - மாகிறேற் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பற்றிக் இம்மனுவேல் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான டேவிட், ரட்ணம், பாக்கியம் (ஆசிரியர்), செல்வம், ராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், விமல்ராஜ் (கனடா), கிறிசாந்தி (கனடா), பசில்ராஜ் (இ.போ.ச) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்ரனி ஜெயக்குமார் (கனடா), கிசாயினி ஆகியோரின் மாமியாரும், கேய்லின் (கனடா), மெர்லின் (கனடா), அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (17.04.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்.**

(CS/24492)AH-1

## மரண அறிவித்தல்



### மங்களராஜேஸ்வரி சிவராஜா

தோற்றம் 28.03.1942 — மறைவு 16.04.2023

இல.27, கனகசபை ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவி திருமதி மங்களராஜேஸ்வரி சிவராஜா நேற்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செங்கமலம் தம்பதிகளின் மருமகளும், சத்தியேந்திரா, வாசுகி, ஸ்ரீ ஆனந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிறஞ்சலா, காலஞ்சென்ற சந்திரமோகன் ஆகியோரின் மாமியாரும், ரவீந்திரன், கௌரி, தாசன் ஆகியோரின் சகோதரியும், பவித்திரன், துவாரகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.04.2023) திங்கட்கிழமை எஸ். இன்பம் அந்தியகால சேவை மண்டபத்தில் (மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் முற்பகல் 11 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**077 948 1634** (CS/24491)AH-1 **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்

## திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா

அம்மா ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை வீட்டு அகலாது உங்கள் நினைவு
அன்பினால் பண்பினால்
நட்பினால் ஆளுமையால்
எங்கள் அனைவரது உள்ளங்களில்
குடியிருக்கும் எம் அன்னையே
நாம் என்றென்றும் நினைத்திருப்போம்.

அன்னையின் ஆத்மா
இறைபாதம் சரணடைய
பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தோற்றம் 21.03.1938 மறைவு 27.04.2022

**76/1, யமுனா வீதி, நல்லூர்.**

(CS 24499)A-1

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு



## மலசலகூடங்கள் மீள்புனரமைப்புச் செய்வதற்கான கூறுவிலை கோரல்

கோவிலில் அமைந்துள்ள 52 மலசலகூடங்களை மீள்புனரமைப்புச் செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்புவோர் கோவில் காரியாலயத்தில் அதற்கான படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி **29.04.2023 ஆம் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு"** என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது **கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறு விலைப் பெட்டியினுள் இடப்பட வேண்டும்.**

**ந.மோகனரூபன்,**
**செயலாளர், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,**
**நயினாதீவு.**

(CR/39656)AH-1

# மரண அறிவித்தல்

## வின்சன் இஸ்ராயேல் மேரி திரேசா



கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன் இஸ்ராயேல் மேரி திரேசா நேற்று (16.04.2023) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி லோறன்ஸ் தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற வின்சன் இஸ்ராயேலின் அன்பு மனைவியும், அன்ரன் டேவிட், பற்றிமா ரஞ்சினி, மக்கலின் ராஜினி, டெய்சி, மேரி ஜசிந்தா, காலஞ்சென்ற மோகன்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசீலா, மரியதாசன், யேசுதாசன், தவராசா ஆகியோரின் மாமியும், நிருந்தா, அனோஜா, அருட்சகோதரி மரின் டிலோசியா (HFC), அருட்தந்தை டிலோசன் ரஜீவ் (OMI), பிராங்லின் டிலான், ஐறின் நிரோஷா, செறின் ஜீவிதா, அஜித் ஜீவராஜ், கரன் சாந்தறூபன், நிரோஷிகா றூபினி ஆகியோரின் பேர்த்தியும், அஞ்சலிக்கா, ஏட்றியன், சர்வின், ஜெவ்றின், அக்ஷயன், அபிநாஸ், அஸ்வினி, அனுஸ்கா, சாரா ஆகியோரின் பூட்டியுமாவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.04.2023) திங்கட்கிழமை யாழ். புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் பிற்பகல் 4 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின்னர் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 245 4047 (டெய்சி)**
**077 4486 712 (அன்ரன் டேவிட்)**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

(CS 24500)1-6

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை புஸ்பராசா (கண்ணன்)

உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புஸ்பராசா நேற்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை புவனேஸ்வரி தம்பதியரின் மகனும், தவராசா, தருமராசா, அருள்நாயகி, ஜெசிந்தா ஆகியோரின் சகோதரனும், யோகலிங்கம், சத்தியகுமார், குலம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், அஸ்வினி, பிறேமினி, லக்சிகா, துஷாரன், நிமல்ராஜ், திலினியா ஆகியோரின் மாமனாரும், விதூசன், சரண்யா, சர்மிளா ஆகியோரின் சிறிய தந்தையும், விசிதா (குவிஷ்) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2023) திங்கட்கிழமை அவரது சகோதரி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாவடி மயான வீதி, தாவடி.**
**077 6450 246**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 39657)A-1

# மரண அறிவித்தல்

## செல்வி கிறேஸ் அமிர்தமலர் சின்னத்தம்பி

(Retired Telegraph Monitor - Jaffna Post Office)

**தோற்றம் : 29.06.1930** **மறைவு : 16.04.2023**



கிறேஸ் அமிர்தமலர் சின்னத்தம்பி அவர்களின் மறைவுசெய்தியை மிகவும் மனவருத்தத்துடன் இவ்வழியாய் பகிர்ந்துகொள்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. சொலமன் போல் சின்னத்தம்பி மற்றும் திருமதி விக்ரோறியா அருளம்மா அவர்களின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செல்வி ஹனா சோபிதமலர், விக்ரர் கிருபைராஜ், றெஜினோல்ட், திருமதி ஜொய்ஸ் கருணாவதி தோமஸ் மற்றும் வணபிதா சாமுவேல் கருணைராஜ் அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.04.2023) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு 19/1, காட்டுக்கந்தோர் வீதி, சுண்டிக்குளியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**19/1, காட்டுக்கந்தோர் வீதி,**
**சுண்டிக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777 120 932**

(CS 24502)1-6

# மரண அறிவித்தல்

## திருமதி வரதராசா இராஜசிலோசனா

**தோற்றம் : 03.01.1962** **மறைவு : 16.04.2023**



கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் பொல்வத்தை இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதராசா இராஜசிலோசனா நேற்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், வைரமுத்து வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், வரதராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (இத்தை) தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இராசபூபதியின் அன்புச் சகோதரியும், அமரர்களான வரப்பிரசிங்கம், இராஜகோபால், ஆனந்தமயில், இரத்தினசிங்கம், இராசரத்தினம் (KR), இராசரத்தினம் மற்றும் சோதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்லக்கிளி, வரதலட்சுமி, சூரியகுமாரி, கனகரத்தினம் (அமரர்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சந்திரமோகன்- தர்மினி, சந்திரராணி - கணேசராசா (அமரர்), சந்திரபவன் - கிருபா, சுபகா ஆகியோரின் பாசமிகு சித்தியும், சாந்தகுமார், சதீஸ்குமார், கவிதா - சுதா ஆகியோரின் பாசமிகு அத்தையும், நவநீதன் - விஸ்வரூபி ஆகியோரின் சித்தியும், காலஞ்சென்றவர்களான கைராசிப்பிள்ளை, ஆச்சிப்பிள்ளை, சின்னத்தங்கம், செல்லம்மா ஆகியோரின் மருமகளும், மார்க்கண்டு (மாஸ்டர்) வின் பெறாமகளும், றன்சிகா, பிருந்துஜன், சுவஸ்திகா, ஐஜீவன், பவிஷா, கிஷானி, சிந்துஜா, துசானா, வசீகரன், குருபரன், கிசானா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பொன் [illegible] வாய்க்காலுக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24502)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையின் கோட்டைக்குள் வீழ்ந்தது கொல்கத்தா





மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணியை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபாரமாக வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ் அணி.

மும்பை அணித்தலைவர் ரோகித் சர்மாவுக்கு ஏற்பட்ட உடல் உபாதை காரணமாக சூர்யகுமார் யாதவ்வின் தலைமையில் களமிறங்கியது மும்பை இந்தியன்ஸ் அணி. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணித்தலைவர் கொல்கத்தா அணிக்கு முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை வழங்கினார். இதன்படி களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்களின் பங்களிப்பு பெரிதாக அமையவில்லை. குர்பாஸ் 8 ஓட்டங்களுடனும் ஜகதீசன் ஓட்டமெதையும் பெறாமலும் பவிலியன் திரும்பினர். மறுமுனையில் தனி ஒருவனாக அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய வெங்கடேஸ் ஐயர் மும்பை பந்துவீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் சிதறடித்தார். 9 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 51 பந்துகளில் 104 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மத்தியவரிசையில் எதிர்பார்க்கப்பட்ட ரிங்கு சிங் 18 ஓட்டங்களையும் ரஸல் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 185 ஓட்டங்களைக் குவித்தது கொல்கத்தா அணி. பந்து வீச்சில் மும்பை சார்பாக ரித்திக் சொகீன் அதிகபட்சமாக 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

186 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை அணிக்கு ஐ.பி.எல்லின் புதிய விதிமுறைகளுக்கமைய உபாதை காரணமாக ஆட்டத்திலிருந்து விலகிய ரோகித் சர்மா மீண்டும் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பைப் பெற்றார். அவருடன் இணைந்து இசான் கிசனும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கினார். இருவரும் இணைப்பாட்டமாக 65 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் ரோகித் சர்மா 2 சிக்ஸர்கள், 1 பவுண்டரி உள்ளடங்கலாக 13 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். இசான் கிசன் வேகமாக துடுப்பெடுத்தாடி 5 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த மும்பைத் துடுப்பாட்ட வீரர்களும் அதிரடியைக் கைவிடாமல் ஆட்டத்தை நகர்த்திச் செல்ல மும்பை அணிக்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமானது. கடந்த ஆட்டங்களில் தடுமாறிய சூர்யகுமார் யாதவ்வும் சிறப்பாக ஆடி 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 25 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். திலக் வர்மா 30 ஓட்டங்களையும் ரிம் டேவிட் ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 17.4 ஓவர்கள் நிறைவில் இலக்கைத் துரத்தி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்தது மும்பை அணி. பந்து வீச்சில் கொல்கத்தா சார்பாக சுயாஸ் சர்மா 2 விக்கெட்டுக்களையும் சர்துல் தாகூர், வருண் சக்கரவர்த்தி மற்றும் லொக்கி பெர்குஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி கன்னிச் சதத்தைப் பெற்ற கொல்கத்தா அணி வீரர் வெங்கடேஸ் ஐயர் தெரிவானார். (ஒ-ரி1)

# குஜராத்தை வீழ்த்திய ராஜஸ்தான் ரோயல்ஸ்





அஹமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது ராஜஸ்தான் ரோயல்ஸ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணித்தலைவர் சன்ஜூ சாம்சன் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய குஜராத் அணிக்கு ரித்திமன் சகா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து வந்த சாய் சுதர்சன் 20 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அணித்தலைவர் ஹர்திக் பாண்டியா சுப்மன் கில்லுடன் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தப் போராடினார். அவரும் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரி அடங்கலாக 19 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்று பவிலியன் திரும்பினார். மத்திய வரிசையில் களமிறங்கிய மில்லர் அணியின் நிலைமையை உணர்ந்து பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடி 30 பந்துகளை எதிர்கொண்டு 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சந்தீப் சர்மா வீசிய இறுதி ஓவரில் ஆட்டமிழந்தார். 3 சிக்ஸர்களை விளாசிய அபினவ் மனோகர் அணிக்காக 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க குஜராத் டைட்டன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றது. ராஜஸ்தான் அணி சார்பாக சந்தீப் சர்மா 2 விக்கெட்டுக்களையும் போல்ட், அடாம் சாம்பா மற்றும் சகால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

178 எனும் ஓரளவு இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர் ஹர்திக் பாண்டியா மற்றும் மொஹமட் சமி. ஹர்திக் வீசிய இரண்டாவது ஓவரில் ஜைஸ்வால் ஒரு ஓட்டத்துடனும், சமி வீசிய மூன்றாவது ஓவரில் ஜோஸ் பட்லர் ஓட்டமெதையும் பெறாமலும் நடையைக் கட்ட ராஜஸ்தான் அணி 4 ஓட்டங்களுக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் இழந்து தடுமாறியது. அணித்தலைவர் சன்ஜூ சாம்சன் அணியின் இக்கட்டான நிலையை உணர்ந்து அதிரடியாகவும் பொறுப்பாகவும் துடுப்பெடுத்தாடி ராஜஸ்தான் அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றார். இவர் 32 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 15 ஆவது ஓவரில் சாம்சனின் விக்கெட்டும் இழக்கப்பட மீண்டும் ஆட்டம் குஜராத் பக்கம் மாறியது. ஆனாலும் ஆட்டத்தின் போக்கை எந்நேரத்திலும் மாற்றக்கூடிய ஹெட்மயர் தொடர்ந்தும் களத்திலிருந்தார். இவர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் குஜராத் பந்துவீச்சாளர்களை அடித்து நொறுக்கினார். ஹெட்மயரின் அதிரடியால் ஆட்டத்தின் போக்கு ராஜஸ்தான் பக்கம் திரும்பியது. சமி வீசிய பத்தொன்பதாவது ஓவரில் அஸ்வினும் ஜுரேலும் சிக்ஸர்களை விளாச ராஜஸ்தானின் வெற்றி உறுதியானது. இறுதி ஓவரில் 7 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஹெட்மயர் அந்த ஓவரின் இரண்டாவது பந்தை சிக்ஸருக்கு அனுப்ப ராஜஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களால் சிறப்பானதொரு வெற்றியைப் பதிவு செய்தது. ஹெட்மயர் 26 பந்துகளை எதிர்கொண்டு 5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் குஜராத் சார்பாக சமி 3 விக்கெட்டுக்களையும் ரஷித் கான் 2 விக்கெட்டுக்களையும் ஹர்திக் பாண்டியா, நூர் அஹ்மட் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக ஹெட்மயர் தெரிவானார். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் மாணவன் மீது வீடு புகுந்து தாக்குதல்

வவுனியா, ஏப். 17

வவுனியா, வேப்பங்குளம் 60 ஏக்கர்பகுதியிலுள்ளவீடொன்றுக்குள் புகுந்து மாணவன் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காயமடைந்த மாணவன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இரண்டு பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் இருவருக்கு இடையில் கடந்த சில நாள்களாக வாய்த்தர்க்கம் நிலவி அது கைகலப்பாக மாறியது. இந்த நிலையில் மாணவன் ஒருவரின் பெற்றோர் அதில் தலையிட்டு சமரசப்படுத்தினர்.

நேற்றுமுன்தினம் மாலை சம்பவத்துடன் தொடர்புடைய மாணவனின் வீட்டுக்குள் மற்றைய மாணவன் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளான். இதில் 16 வயது மாணவன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் மற்றைய மாணவனுக்கு 17 வயது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ,18)

## ‘அம்மனுக்கு...

கடந்த சித்திரைப்புத்தாண்டு அன்று பண்ணைசுற்றுவட்டத்துக்கு அண்மையில் நாகபூஷணி அம்மன் சிலை வைக்கப்பட்டது. இந்தச் சிலையை நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்று பார்வையிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான நீதிமன்றக் கட்டளை சிலைக்கு அருகில் ஒட்டப்பட்டுள்ளது.

'எதிர்காலத்தில் போக்குவரத்துக்கு இடையூறு மற்றும் இன, மத, சமூக உடன்பாடுகளுக்கு விளைவுகள் ஏற்படும் நிலை உருவாகி சமாதான சீர்குலைவு ஏற்பட வாய்ப்புள்ளதென அறிக்கை செய்து அந்தச் சிலையை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்திச் சபையின் அதிகாரிக்கு கட்டளையொன்றைப் பிறப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது' என்று பொலிஸாரால் ஒட்டப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாசகத்தைச்சுட்டிக்காட்டியே பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கையை இளையோர் பலரும் சமூகவலைத்தளங்களில் கண்டித்துள்ளனர்.

குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி விகாரை அமைப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காத பொலிஸார், குருந்தூர் மலையில் உடைக்கப்பட்ட இந்து ஆலய விக்கிரகங்களைக் கண்டுபிடிக்காத பொலிஸார் இங்கு மாத்திரம் இவ்வளவு ஆர்வம் காண்பிப்பது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் குறிகாட்டுவான் இறங்குதுறையில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ள அரச மரத்தைக்கூட அகற்ற ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கேள்வி தொடுத்துள்ளனர்.

இந்தச் சிலை வைக்கப்பட்டமையால் இன, மத முரண்பாட்டு ஏற்பட்டு சமாதானம் சீர்குலையும் என்று எப்படி பொலிஸார் குறிப்பிடமுடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் தமிழர்கள் வாழும் பகுதிகளில் புத்தர் சிலைகள் வைப்பதாலேயே அவ்வாறான சூழல் ஏற்படலாம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அது தொடர்பில் வாயே திறக்காத பொலிஸ் திணைக்களம் இத்தகைய நடவடிக்கை எடுப்பது பக்கச்சார்பானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை- நயினாதீவிலுள்ள விகாராதிபதியின் தூண்டுதலாலேயே இவ்வாறான ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதை உறுதிப்படுத்தமுடியவில்லை. (அ.ஒ.5)

## தினமும்...

உச்சம் கொடுப்பதால் மத்தியான நேரங்களில் வெளிப்பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. அத்துடன் தினமும் 2 தொடக்கம் 3 லீற்றர் வரை தண்ணீரை அருந்தவேண்டும் என யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதியளவு நீராகாரங்கள் அருந்த வேண்டும். நீர்த் தன்மையுள்ள பழங்களான வெள்ளரிப்பழம், கெக்கரி போன்றவற்றை உண்ணவேண்டும். நமது சூழலில் காணப்படும் நிழல் தரும் மரங்கள் மிக முக்கியமானதாகும். இவற்றை இத் தருணத்தில் நாங்கள் பாதுகாக்கவேண்டிய தேவையுள்ளது.

**மருந்துத்தட்டுப்பாடு**

கடந்த சில மாதங்களாக நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளது. கிளினிக் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற இன்சுலின் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவியது. தற்போது சுகாதார அமைச்சிலிருந்து அந்த மருந்துகள் கிடைத்துள்ளன. சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்க வேண்டிய மருந்துகளும் கிடைக்கப் பெற்றுள்ளன - என்றார். (அ-ஒ.இ)

## இந்தியப்...

கடற்படையினர் தடுத்து நிறுத்தி 3 சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்ததாகக் கடற்படை ஊடகப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

வழமையான ரோந்து நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமான இந்தியக் கப்பலை கண்டதாகவும் அதனை மறித்து சோதனையிட்டபோதே கஞ்சா மீட்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

62 கிலோ 400 கிராம் எடையுள்ள 23 பொதிகளில் இருந்த கேரளக் கஞ்சாவை கடற்படையினர் மீட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் மொத்த மதிப்பு ரூ. 20 மில்லியன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.இ)

## வேலணையில்...

பெற்ற இந்தச் சம்பவத்தில் ராசதுரை ரமணன் (வயது - 52) என்பவரே உயிரிழந்துள்ளார். கிணற்றுக் கட்டில் சறுக்கி விழுந்து உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (அ-ஒ.23)

## அன்னை...

முகமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிய ஊர்திப் பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபியடியில் ஆரம்பமானது.

நேற்றுப் பிற்பகல் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவுத் தூபியடியில் திலீபனின் உருவப் படத்துக்கு முன்பாக ஈகச் சுடரேற்றியும், மலர்மாலை அணிவித்தும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அன்னை பூபதித் தாயின் உருவப் படத்துக்கு முன்பாகவும் ஈகச் சுடரேற்றியும், மலர்மாலைகள் அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் நினைவு உரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து அன்னை பூபதியின் ஊர்திப் பவனி நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் ஆரம்பமானது. ஊர்திப் பவனி கோவில் வீதி ஊடாக யாழ். நகரைச் சென்றடைந்து அங்கிருந்து கண்டி நெடுஞ்சாலையின் ஊடாக கிளிநொச்சி சென்றடைந்தது. அங்கிருந்து முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பகுதியைச் சென்றடைந்ததுடன் முதல் நாள் ஊர்திப் பவனி நிறைவடைந்தது.

அன்னை பூபதி உயிர்நீத்த நாளான எதிர்வரும் 19 ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள பூபதியம்மாவின் நினைவுத் தூபியை ஊர்திப் பவனி சென்றடையும்.

அனைத்து மக்களும் ஊர்திப் பவனி செல்லும் இடங்கள் தோறும் கலந்துகொண்டு அன்னைக்கு அஞ்சலி செலுத்துவோம் வாரீர் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ஒ.66)

## பெண் சிப்பாய்....

5ஆம் திகதி ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக மறுநாள் பலாலி இராணுவ மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு டெங்குக் காய்ச்சல் என மருத்துவப் பரிசோதனைகளில் உறுதிசெய்யப்பட்டது. அதனையடுத்து அவர் கடந்த 7ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ.26)

## வயலுக்குச்...

வித்தனர். புளியங்குளத்தைச் சேர்ந்த ஜெகநாதன் கேஜிதன் (வயது - 20) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு புதூர் பகுதியில் உள்ள தனது வயல் காவலுக்கு இந்த இளைஞர் சென்றுள்ளார். நேற்றுக் காலை இளைஞர் வீடு திரும்பாமையால் அவரது குடும்பத்தினர் தேடிச்சென்றபோது, வயற் பகுதியில் இளைஞர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இளைஞரின் உயிரிழப்புத் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞரின் மூத்த சகோதரர் 4 ஆண்டுகளுக்கு முன்னர் புதூர் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் உழவு இயந்திரத்தில் கடக்கின்றபோது ரயிலுடன் மோதி அவரும் அவரது நண்பரும் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.18,110)

## வவுனியாவில்...

செட்டிகுளம் - கப்பாச்சியை சேர்ந்த ராமலிங்கம் அனுசன் (வயது - 23) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நெடுங்கேணியிலிருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது முன்னால் சென்றுகொண்டிருந்த பட்டா ரக வாகனத்தில் பின்புறமாக மோதுண்டுள்ளனர். இதன் காரணமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திய அனுசன் உயிரிழந்தார். அவரது மனைவி சிறு காயங்களுக்குள்ளாகினார். விபத்து தொடர்பாகப் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஒ.18,110)

## பாடசாலைகள்...

நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-ஒ.இ)

## இந்தியா...

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு இந்தியா எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் சீனாவும் முக்கியமானது. இலங்கையின் அபிவிருத்தியில் சீனா பெரும் பங்குவகிக்கின்றது. இந்தியாவும் தன்னால் இயன்ற உதவிகளை இலங்கைக்கு வழங்கிவருகின்றது. ஆனால், இந்தியா நிபந்தனைகளுடன் தான் உதவிகள் வழங்குகின்றது. சீனா இலங்கைக்கு நிபந்தனைகள் எதனையும் விதிப்பதில்லை.

இந்தியாவின் நிபந்தனைகள் அரசியல் நிபந்தனைகளாகும். இலங்கைக்கு ஒவ்வாத 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றுமாறு இலங்கைக்கு இந்தியா நிபந்தனை விதிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல் இலங்கையில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் அதிகளவில் வாழ்கின்றார்கள் என்பதை இந்தியா மறக்கக்கூடாது - என்றார். (அ-ஒ.22)

## நாகபூஷணி...

நயினாதீவு நாகபூஷணி அம்மன் வீற்றிருக்கும் தீவகத்தின் நுழைவாயிலான யாழ்ப்பாணச் சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றுவது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு மீதான விசாரணை நாளை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் நாகபூஷணி அம்மன் சிலை தொடர்பில் முக்கியமான கலந்துரையாடலொன்று இன்று மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன சுவாமிகள் தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் அனைத்து இந்து சமய அமைப்புகள், ஆலய அறங்காவலர்கள் சைவ அபிமானிகள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காரைக்கால் - காங்கேசன்

# பயணிகள் கப்பல்சேவை; மே 15 இல் தான் ஆரம்பம்

காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவை அடுத்தமாதம் 15ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இந்த மாதம் 28ஆம் திகதி சேவை தொடங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டபோதும் அது தற்போது பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்தப் படகுச் சேவையை முன்னெடுக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 'இந்துஸ்ரீ' படகுச் சேவை தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். நிரஞ்சன் நந்தகோபன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

காங்கேசன்துறை மற்றும் காரைக்கால் இடையே 4 மணி நேரங்களைக் கொண்ட இந்தப் படகுச்சேவைக்கு இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில் சேவை ஆரம்பமாகும். காரைக்கால் துறைமுகத்தின் ஒப்புதலுக்காக தற்போது காத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் கப்பல் சேவையில் பணியாற்றவுள்ள கப்பல் கப்டன் மற்றும் ஆறு பணியாளர்கள் அனைவரும் இந்தியர்களாவர். கப்பல் சேவை இந்தியக் கொடியின் கீழ் நடத்தப்படும். சேவையில் ஈடுபடவுள்ள கப்பல் சிங்கப்பூரில் இருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் சர்வதேச கடல்சார் தர நிர்ணயங்களைக் கொண்டது எனவும் நந்தகோபன் குறிப்பிட்டார்.

பயணிகள் கப்பல் சேவைக் கட்டணமாக 50 அமெரிக்க டொலர் மற்றும் வரி அறவிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார். 120 முதல் 150 பேர் வரை பயணிக்கக் கூடிய இந்தக் கப்பலில் பயணிக்கும் பயணிகள் தலா 100 கிலோ பொருள்களைக் கொண்டு செல்லமுடியும்.

இந்தப் படகில் பயணிகளுக்கான உணவகம் ஒன்றும் இயங்கும். கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டு முதல் 3 மாதங்களுக்கு வரி இல்லாத பயணிகள் சேவையை முன்னெடுக்க இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)


## வேலையாட்கள் தேவை

றொட்டி / தோசை (இந்தியன்) அப்பம் (Sweet Items) செய்ய தெரிந்தவர்கள் (ஆண்/பெண்) உடன் தேவை. (தங்குமிட வசதி உண்டு)

தொடர்பு: 076 423 6862

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

பார்வையிடும் நேரம்
காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

(CS 24495) A-1

## காணி விற்பனைக்கு உண்டு


- யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

தொடர்பு:
077 076 0389
076 9119 371
076 7390 413

(CS 24454) A-1


## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 01 . 1948

இறப்பு 14 . 04 . 2023

### கந்தையா ஆனந்தராசா

அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஆனந்தராசா கடந்த (14.04.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயந்திமாலாவின் அன்புக் கணவரும், திருவேணி (UK) யின் பாசமிகு தந்தையும், ஜெயரூபனின் (UK) அன்பு மாமனாரும், பாசினி, ரிசோத் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஞானமிர்தம் மற்றும் கந்தாசி, அமிர்தராணி, பத்மநாதன், சண்முகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, தனலட்சுமி, பேரின்பநாயகம், ஏகாம்பரநாதன், சிவநாதன், சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் வரதலட்சுமி, சாந்தகுமார், சாந்தினி, விஜயலட்சுமி, துரைராசா, பத்மராணி, ரஜனி, பத்மலோஜினி, தங்கராசா, காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (18.04.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.ஜெயந்திமாலா (மனைவி)
மகள் - திருவேணி
மருமகன் - ஜெயரூபன்


அச்செழு, நீர்வேலி.
075 509 4423

(CS/24474)AH-1

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் ஆனந்தசிவம்

(முன்னாள் உரிமையாளர் - சிவாஸ் மணிக்கூட்டு தொழிலகம்)



தோற்றம் 15 . 11 . 1948

மறைவு 16 . 04 . 2023

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஆனந்தசிவம் நேற்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (17.04.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 396 8863

(CS/24490)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 463 0000 - விளம்பரம் : 021 - 463 1111 ... advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.